# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1474/5 - 2006 දෙසැම්බර් 06 වැනි බදාදා - 2006.12.06

*1474/5 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. வ. சீ.எவ். 1/64*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் ஆக்கப்படும் பிரகடனம்**

முத்திரை

மஹிந்த ராஜபக்ஷ

சமாதானத்தை உருவாக்கி, தேசியப் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினால் நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட முயற்சிகளும் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளும் எவ்வாறிருப்பினும், குறிப்பாகச் சொல்லப்பட்ட குடியரசிலிருந்து பிரிந்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தினது குறித்த சில பகுதிகளில் தனி நாடொன்றைத் தாபிக்கும் உட்கருத்துடன், குறித்த சில ஆட்களினாலும் ஒழுங்கமைப்புகளினாலும் புரியப்படும் பயங்கரவாதச் செயல்களின் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவதும் ஆபத்துக்குள்ளாக்கப்படுவதும் தொடர்வதாதலாலும் ;

அத்துடன் அத்தகைய செயற்பாடுகளின் தீவிரமும் தன்மையும் தேசிய மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிக்கின்றனவானவொரு முறையில் தொடர்ந்துகொண்டிருப்பதாதலாலும் ;

அத்துடன் தேசியப் பிரச்சினைக்குச் சமாதானமான தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவ்வாறிருப்பினும்,அத்தகைய பயங்கரவாதச் செயல்களைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களும் ஒழுங்கமைப்புகளும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குறித்த சில பகுதிகளில் தனி நாடொன்றைத் தாபிப்பதற்கான தமது குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலிருந்து தமது உட்கருதப்பட்ட சுதந்திரத்தை ஒருதலைப்பட்சமாக வெளிப்படுத்தக்கூடுமென இப்போது தோன்றுவதாதலாலும் ;

அத்துடன் மேற்சொல்லப்பட்ட நோக்கில் பொது அவசரகால நிலைமையொன்று இருப்பதாதலாலும் அத்துடன் நிலவுகின்ற சூழ்நிலை பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கும் எனது நோக்கில் பங்கம் விளைவிப்பதாக இருப்பதாதலாலும் ;

அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதன் நலனில் அத்தகைய பயங்கரவாதத்தின் மிகையான செயல்களையும் வேறு குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளையும் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்கும் முடிவுறுத்துவதற்கும் மற்றும் தடைசெய்வதற்கும் அவசியமுள்ளதா தலாலும் ;

அத்துடன் ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ், 2001, செத்தெம்பர் 28 ஆந் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட 1373 ஆம் இலக்க (2001) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானத்தைக் குறிப்பாக உள்ளடக்கி, அவற்றுக்கு இலங்கை ஒரு திறத்தவராகவுள்ள, பயங்கரவாதத்தைத் தடுத்தலும் அடக்குதலும் தொடர்பான சர்வதேச சமவாயங்களினாலும் ஏனைய சட்டப்படி பிணிக்கின்ற சர்வதேச சட்டச் சாதனங்களினாலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளுக்குச் செயற்றிறனுடன் பயன்கொடுப்பதற்கான தேவையைக் கவனத்துட்கெடுத்து, சனாதிபதி 40 ஆம் அத்தியாயமான பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு உத்தேசித்துள்ள தாதலாலும்.

இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு திசெம்பர் மாதம் ஆறாம் நாளன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க.
சனாதிபதியின் செயலாளர்.

---

ச. வ. சீ.எவ். 1/64

## அரசாங்க அறிவித்தல்கள்

## (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2006, திசெம்பர் 6.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2006 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அவசரகால (பயங்கரவாதத்தையும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளையும் தடுத்தலும் தடைசெய்தலும்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சமாதானத்தை உருவாக்கி தேசியப் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்துவைப்பதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினால் நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட முயற்சிகளும் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளும் எவ்வாறிருப்பினும், குறிப்பாகச் சொல்லப்பட்ட குடியரசிலிருந்து பிரிந்து இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புலத்தினது குறித்த சில பகுதிகளில் தனி நாடொன்றைத் தாபிக்கும் உட்கருத்துடன், குறித்த சில ஆட்களினாலும் ஒழுங்கமைப்புகளினாலும் புரியப்படும் பயங்கரவாதச் செயல்களின் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குட்பட்டும் ஆபத்துக்குட்பட்டும் உள்ளன.

3. அத்தகைய செயற்பாடுகளின் தீவிரமும் தன்மையும் தேசிய மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு மற்றும் சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கம் விளைவிக்கின்றனவொரு முறையில் தொடர்கின்றன.

4. தேசியப் பிரச்சினைக்குச் சமாதானமான தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட முயற்சிகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய பயங்கரவாதச் செயல்களைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களும் ஒழுங்கமைப்புகளும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குறித்த சில பகுதிகளில் தனி நாடொன்றைத் தாபிப்பதற்கான தமது குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலிருந்து தமது உட்கருதப்பட்ட சுதந்திரத்தை ஒருதலைப்பட்சமாக வெளிப்படுத்தக்கூடுமென இப்போது தோன்றுகின்றது.

5. ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ், 2001, செத்தெம்பர் 28 ஆந் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட 1373 ஆம் இலக்க (2001) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானத்தைக் குறிப்பாக உள்ளடக்கி, அவற்றுக்கு இலங்கை ஒரு திறத்தவராகவுள்ள, பயங்கரவாதத்தைத் தடுத்தலும் அடக்குதலும் தொடர்பான சர்வதேச சமவாயங்களினாலும் ஏனைய சட்டப்படி பிணிக்கின்ற சர்வதேச சட்டச் சாதனங்களினாலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளுக்குச் செயற்றிறனுடன் பயன்கொடுப்பதற்கான தேவையைக் கவனத்துட்கெடுத்து, பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கும் அடக்குவதற்குமான குறிப்பிடத்தக்க வழிமுறைகளை எடுப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகிற்று.

6. ஒழுங்கமைப்பொன்றுட்பட, ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆளெவரும் அல்லது ஆட்கள் தொகுதிகளெவையும், தனிப்பட்ட முறையில் அல்லது ஒரு தொகுதியாக அல்லது தொகுதிகளாக அல்லது வேறு ஆட்கள் மூலமாக –

(அ) பயங்கரவாதத்தில், அல்லது

(ஆ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டில், அல்லது

(இ) எவரேனுமாளினால், ஆட்கள் தொகுதியினால் அல்லது ஆட்கள் தொகுதிகளினால் புரியப்பட்ட ஏதேனும் பயங்கரவாதச் செயலை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதிலான வேறேதேனும் செயற்பாட்டில்,

ஈடுபடுதலாகாது.

7. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாளின், ஆட்கள் தொகுதியின் அல்லது ஆட்கள் தொகுதிகளின் அல்லது ஒழுங்கமைப்பொன்றின் –

(அ) சீருடையை, உடையை, சின்னத்தை, தனிக்குறியை அல்லது கொடியை அணிதலோ, வெளிக்காட்டுதலோ, ஏந்துதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது ;

(ஆ) கூட்டமொன்றை அழைத்தலோ, கூட்டுதலோ, நடாத்துதலோ அல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது ;

(இ) உறுப்பாண்மையைப் பெறுதலோ அல்லது அதைச் சேருதலோ ஆகாது ;

(ஈ) ஓர் உறுப்பினருக்கு, அங்கத்தவருக்கு அல்லது வேறெவரேனும் இணையாளுக்குப் புகலிடம் அளித்தலோ, அவரை மறைத்து வைத்தலோ, அவருக்கு உதவுதலோ ஆகாது ;

(உ) மேம்பாட்டுக்கு உதவுதலோ, அவரை ஊக்குவித்தலோ, அவருக்கு ஆதரவளித்தலோ, மதியுரையளித்தலோ, துணை புரிதலோ, அவரது சார்பில் செயலாற்றுதலோ ஆகாது ; அல்லது

(ஊ) ஏதேனும் செயற்பாட்டை அல்லது நிகழ்வை ஒழுங்குபடுத்துதலோ அல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது.

8. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம். 7 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற, ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனுமாளுக்கு, ஆட்கள் தொகுதிக்கு அல்லது ஆட்கள் தொகுதிகளுக்குப் பொருள் வகையாகவோ அல்லது வேறு வகையாகவோ உதவு தொகையளித்தல், வழங்குதல், நன்கொடையளித்தல், விற்பனை செய்தல், வாங்குதல், கேள்வுக்கு விடுதல், குத்தகைக்குக் கொடுத்தல், பெறுதல், கிடைக்கக் கூடியதாக்குதல், நிதியளித்தல், விநியோகித்தல் அல்லது கடனாகக் கொடுத்தல் என்பன உட்பட எத்தகையதுமான எம்முறையிலேனும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது அல்லது அத்தகையவோர் ஆளின், ஆட்கள் தொகுதியின் அல்லது ஆட்கள் தொகுதிகளின் ஓர் உறுப்பினருடன், அங்கத்தவருடன் அல்லது இணையாளுடன் எத்தகையதுமான எம்முறையிலேனும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது ;

ஆயின், எவ்வாறாயினும், சமாதானமான அரசியல் தீர்வைக் காண்பதனை வசதிப்படுத்தும், பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை முடிவுறுத்தல், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும்

சேவைகளையும் பேணுதல், அபிவிருத்திசார் செயற்பாடுகளை நடாத்துதல் என்ற நோக்கங்களுக்காக, அல்லது வேறேதேனும் சட்டமுறையான நோக்கத்துக்காக, இதற்கான 6 ஆம் அல்லது 7 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளொருவருடன் அல்லது ஆட்கள் தொகுதியுடன் அல்லது ஆட்கள் தொகுதிகளுடன், தேசிய அல்லது சர்வதேச அரசாங்கஞ்சார் அல்லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பொன்றுட்பட்ட எவரேனுமாள், நல்லெண்ணத்துடனும் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்திலான அங்கீகாரத்துடனும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

ஆயின், மேலும், இதற்கான 6 ஆம், 7 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றக்கூடிய எவரேனுமாளுக்கு அவசர மருத்துவச் சிகிச்சையை அல்லது மருத்துவ உதவியை வழங்குவதற்கென, தகுதிவாய்ந்த அதிகாரியின் அத்தகைய அங்கீகாரத்தைப் பெறுதல் அவசியமாதலாகாது.

9. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாளுக்கு, ஆட்கள் தொகுதிக்கு அல்லது ஆட்கள் தொகுதிகளுக்கு அல்லது ஓர் ஒழுங்கமைப்புக்கு, தேசியப் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கின்ற அல்லது பாதகமேற்படுத்துகின்ற ஏதேனும் தகவலை வழங்குதலாகாது.

10. இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்துடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளுக்குக் குறையாததும் இருபதாண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கான மறியற்றண்டனை அவருக்கு விதிக்கப்படுதலும் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம், 9 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்துடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கான மறியற்றண்டனை அவருக்கு விதிக்கப்படுதலும் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்துடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனைக் காலம் அவருக்கு விதிக்கப்படுதலும் வேண்டும்.

13. இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்றைப் புரிவதற்குச் சதிசெய்கின்ற, புரிவதற்கு எத்தனிக்கின்ற, புரிவதற்கு உடந்தையளிக்கின்ற, புரிவதற்கு ஆயத்த நிலையான ஏதேனும் நடத்தையில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் அதன் மூலம் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்துடன், மேல் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஏழாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனைக் காலம் அவருக்கு விதிக்கப்படுதலும் வேண்டும்.

14. இவ்வொழுங்குவிதிகளின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினாற் புரியப்படுமிடத்து, அப்போது, தவறைப் புரிவதற்கு நேரடியாகப் பொறுப்புடையவராகவிருந்த ஆளுடன் சேர்த்து –

(அ) அவ்வாள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அலுவலரும் ;

(ஆ) அவ்வாட்கள் குழு ஒரு பங்காண்மையாகவிருப்பின், அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளியும் பிரதான நிறைவேற்றலுவலரும் ; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழு, குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய ஆட்கள் குழுவின், தொகுதியின் அல்லது ஒழுங்கமைப்பின் தலைவரும், அதன் முகாமைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்குப் பொறுப்புடையவராகவுள்ள அக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும்,

அத்தகைய ஆட்கள் குழுவுடன் சேர்த்து, அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆளெவரும் அல்லது ஆட்கள் குழுவெதுவும், அத்தகைய தவறு தமது அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு தாம் நல்லெண்ணத்துடன் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகையவொரு தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

15. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதகாரியாக இருப்பதற்கென, ஆளொருவர், பெயரைக் கொண்டு அல்லது பதவியைக்கொண்டு சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

16. இவ்வொழுங்குவிதிகளின் 15 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, சமாதானமான அரசியல் தீர்வை வசதிப்படுத்தும், பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளை முடிவுறுத்தும், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணும், மனிதாபிமான உதவியை வழங்கும், அபிவிருத்திசார் செயற்பாடுகளை நடாத்தும் நோக்குடன் அல்லது வேறேதேனும் சட்டமுறையான நோக்கத்துக்காக, ஒன்றில் நிபந்தனையில்லாமல் அல்லது விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் அல்லது 7 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றக்கூடிய எவரேனும் ஆளுடன் ஆட்கள் தொகுதியுடன் அல்லது ஆட்கள் தொகுதிகளுடன் ஏதேனும் விதிக்கப்பட்ட சட்டமுறையான கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கு எவரேனும் ஆளுக்கு, ஆட்கள் தொகுதிக்கு அல்லது ஆட்கள் தொகுதிகளுக்கு அங்கீகாரமளித்தல் வேண்டும்.

17. இவ்வொழுங்குவிதிகளின் 15 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி செயற்படுகின்ற தகுதிவாய்ந்த அதிகாரியினால் எடுக்கப்பட்ட முடிவொன்றினால் இன்னலுறுகின்ற எவரேனுமாள், அத்தகைய முடிபு எடுக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட மேன்முறையீடுகள் நியாயசபைக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன் முறையீடு செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

18. பதினேழாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட மேன்முறையீடுகள் நியாயசபை, பாதுகாப்பு, நிதி, நாட்டைக் கட்டியெழுப்புதல், திட்டம் செயற்படுத்தல் மற்றும் நீதி அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரியினால் இவ்வொழுங்குவிதிகளின் 14 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி செய்யப்பட்ட முடிபுகளை நிபந்தனையுடனோ நிபந்தனையின்றியோ உறுதிப்படுத்துதல், வேறுபடுத்துதல் அல்லது இல்லாதொழித்தல், மேன்முறையீடுகள் நியாயசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

19. இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க சேவையாளருக்கு அல்லது வேறெவரேனும் ஆளுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை அல்லது துடர்ச்சி எதுவும் இருத்தலாகாது, ஆயின், அத்தகைய ஆள் நல்லெண்ணத்துடனும் தமது அலுவலக முறையான கடமைகளை நிறைவேற்றுவதிலும் செயலாற்றியிருத்தல் வேண்டும்.

20. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக -

"பயங்கரவாதம்" என்பது-

(அ) வன்செயலை, வலோத்காரத்தை, வலுக்கட்டாயத்தை, மிரட்டுதலை, அச்சுறுத்தல்களை, வற்புறுத்துதலைப் பயன்படுத்துவதனை உட்படுத்துகின்ற, அல்லது

(ஆ) தேசியப் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற அல்லது ஆபத்துக்குட்படுத்துகின்ற, அல்லது

(இ) பொதுமக்கள் சனத்தொகையை அல்லது அதன் ஒரு தொகுதியை மிரட்டுகின்ற, அல்லது

(ஈ) பொது ஒழுங்கமைதியை, சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதை ஊடறுக்கின்ற அல்லது அச்சுறுத்துகின்ற, அல்லது

(உ) ஆதனத்துக்கு அழிவை அல்லது சேதத்தை விளைவிக்கின்ற, அல்லது

(ஊ) செயலைப் புரிகின்ற ஆளின் உயிர் தவிர, ஆளொருவரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற, அல்லது

(எ) பொதுமக்களின் அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரின் உடனலத்துக்கு அல்லது காப்புக்குப் பாரதூரமான அபாயத்தை உருவாக்குகின்ற, அல்லது

(ஏ) இலத்திரனியல் முறைமையொன்றுடன் தலையிடுவதற்கு அல்லது அதனை ஊடறுப்பதற்குத் திட்டமிடுகின்ற,

ஏதேனும் சட்டமுறையற்ற நடத்தை என்று பொருளாகும் என்பதுடன், அந்தச் சட்டமுறையற்ற நடத்தை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அல்லது வேறேதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட இறைமைகொண்ட அரசின் இறைமையை அல்லது ஆட்புல ஒருமைப்பாட்டை அல்லது வேறேதேனும் அரசியல் மாற்றத்தை அச்சுறுத்துகின்ற அல்லது ஆபத்துக்குட்படுத்துகின்ற, அல்லது ஏதேனும் செயலைப்

புரியும்படி அல்லது புரியாதுவிடும்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தை வலுக்கட்டா யப்படுத்துகின்ற குறிக்கோளை இலக்காகக் கொண்டது அல்லது அக்குறிக்கோளுடன் ஈடுபாடுடையது என்றும் பொருளாகும் . அத்துடன் அத்தகைய சட்டமுறையற்ற நடத்தைக்கு ஆதரவளிக்கின்ற அல்லது அதனைப் பரப்புகின்ற வேறேதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டையும் உள்ளடக்கும்.

"குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடு" என்பது-

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத்தைத் தடைசெய்தல் சட்டத்தின்கீழான தவறு (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான தவறு, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணத்தூய்தாக்கலைத் தடுத்தற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழான தவறு, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை அடக்குதல் பற்றிய சமவாயத்தின் 3 ஆம் பிரிவின்கீழான தவறு, மற்றும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 114, 115, 116, 117, 121, 122, 128, 129 ஆகிய பிரிவுகளின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறு என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.